## அமித்ஷா அடிக்கல் நாட்டியதால்

# மெட்ரோ ரெயில்– 2 பணி தொடங்கியது!

## 2026–ம் ஆண்டு நிறைவடையும்!!

சென்னை, நவ. 22– அமித்ஷா அடிக்கல் நாட்டியதையடுத்து சென்னை மெட்ரோ ரெயில் 2 திட்டப் பணிகள்தொடங்கப்பட்டுள்ளன. இந்தபணிகள்2026–ம் ஆண்டு நிறைவடையும்.

மத்தியஉள்துறைஅமைச்சர் அமித்ஷா நேற்று, தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்தை மக்களுக்கு அர்ப்பணித்தார்.

அத்துடன் சென்னை மெட்ரோ ரெயில் 2 திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டினார். சென்னையில் ஏற்கனவே மெட்ரோ ரெயில் செயல்பட்டு வருகிறது.

இதுமுதலாவதுகட்டமாகும். அதன்படி, சென்னை விமான நிலையம் – அண்ணாசாலை–சென்ட்ரல்–வட சென்னை விம்கோநகர் வரைஒருபாதையும், சென்ட்ரல்– பூந்தமல்லி நெடுஞ்சாலை–கோயம்பேடு–வடபழனி 100 அடி சாலை வழியாக ஆலந்தூர் வரை இன்னொருபாதையும்நடைமுறையில்உள்ளது. இதையடுத்து 2–ம்கட்டதிட்டத்தை செயல்படுத்த திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி, மாதவரத்தில்இருந்துபெரம்பூர் – கலங்கரை விளக்கம்–அடையாறு–சோழிங்கநல்லூர் வழியாக சிப்காட் வரை ஒரு பாதை அமைக்கப்படுகிறது.

மேலும் மாதவரம், வில்லிவாக்கம், கீழ்க்கட்டளை, சோழிங்கநல்லூர் வரை இன்னொரு பாதை அமைக்கப்படுகிறது.

இதை தவிர, சென்னை கலங்கரை விளக்கத்தில் இருந்துநுங்கம்பாக்கம்வழியாக பூந்தமல்லி வரை மூன்றாவது பாதை அமைக்கப்பட உள்ளது. இவற்றின் மொத்ததூரம்119கி.மீட்டர் ஆகும்.

மொத்தம் 128 நிலையங்கள் அமையும். இதற்காக மொத்தம் ரூ.61.843 கோடி ஒதுக்கப்படுகிறது.

அமித்ஷா அடிக்கல் நாட்டியதால்இதற்கானபணிகள் உடனடியாகதொடங்கிவிட்டன.

இந்தபணிகளில்23குகை அமைக்கும் எந்திரங்கள் பயன்படுத்தப்படஇருக்கின்றன.

மொத்தம்42.6கி.மீட்டர் தொலைவுக்கு பூமிக்கு அடியிலும், மீதிவெளிப்பகுதியிலும் அமையும். 2026–ம் ஆண்டுக்குள் இந்த பணி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.